JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | |
| Miscellaneous | | C.M.P.No | **255/2026** |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 2** | Prosecution /Defence / Court | |
| Name | ஜெகதீஸ்வரி | Village | சிறுகளஞ்சி கிராமம், காலிபாளையம் |
| Husband's Name | சண்முகசுந்தரம் | Taluk | |
| | | Age | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 24.06.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். சிறுகளஞ்சி காலை நம்பர் 418/3 ல் எங்களுக்கும், சின்னசாமி கவுண்டர் மகன் சுப்பிரமணி என்பவருக்கும் 4 ஏக்கர் 30 செண்ட் பாத்தியப்பட்டது ஆகும். பூமியின் வட கோட்டில் 11 அடி தடம் உள்ளது. மேற்படி தடத்தை விட்டு விட்டு கம்பி வேலி போட்டுள்ளோம். மேற்படி பூமிக்கு மேபுறமாக கந்தசாமி, சண்முகம், அன்பரசு ஆகியோர்கள் வசித்து வருகிறார்கள். 20.03.2026 ம் தேதி இரவு 12.00 மணிக்கு நாய் அதிகமாக உளைக்கும் சத்தம் கேட்டது. நானும், எனது கணவர் சண்முகசுந்தரம், எனது மகன் லோக சுந்தரம் 3 பேரும் வெளியே வந்து பார்த்தோம். அப்போது கந்தசாமி, சண்முகம், அன்பரசு மற்றும் அடையாளம் தெரியாத 5 – 6 பேர் அத்து மீறி சம்முட்டியை கொண்டு வந்து கம்பி வேலியை உடைத்து விட்டார்கள்.

2. என் கணவர் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்ட போது தாயோலி மகனே உன்னை விட்டா தானே என்று சொல்லி விட்டு சம்முட்டி, கடப்பாரையை

எடுத்துக் கொண்டு கந்தசாமி, சண்முகம், அன்பரசு 3 பேரும் அடிக்க ஓடி வந்தார்கள். நாங்கள் பயந்து கொண்டு வீட்டுக்குள் ஓடி விட்டோம். பின்னர் 100 க்கு போன் செய்து தகவல் சொன்னோம். அன்றையதினம் இரவு 2.00 மணிக்கு சென்னிமலை போலீசார் 2 பேர் சம்பவ இடத்திற்கு வந்து போட்டோ எடுத்துக்கொண்டு காலையில் புகார் கொடுக்கும் படி சொன்னார்கள். 21.03.2026 ம் தேதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். 4 நாட்களாக எங்களை அலைக்கடித்தார்கள் நாங்கள் கொடுத்த புகாரை எடுக்காமல் எங்களை அலைக்கடித்தார்கள். 24.03.2026 ம் தேதி CSR நகல் கொடுத்தார்கள். பின்னர் 28.03.2026 ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பினேன். அவர்களும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை